21.02.2025

O.S.No.221/2016

பி.வா.சா.4.திரு.ஜோதிமுத்து த.பெ. சுப்பையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த நீதிமன்றத்தில் இருந்த வந்த அழைப்பணை பெற்று கொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மதுரையில் பத்திர எழுத்தராக உள்ளேன். முன்பு ஒத்தக்கடையில் எனது அலுவலகத்தை வைத்திருந்தேன். தற்போது கருப்பாயூரணியில் எனது அலுவலகத்தை வைத்துள்ளேன். நான் மதுரை K. புதூரில் குடியிருந்து வருகிறேன். எனது ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்கிறேன். அது அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட ஆவணம் பி.வா.சா.ஆ **27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் உயில் எழுதியது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்தோனி என்பவர் அமலிக்கு உயில் எழுதுவது சம்மந்தமாக 16.01.2000 ஆம் ஆண்டில் அந்தோனி சார்பாக ஒருவர் வந்து என்னை பார்த்தார். அந்தோனிக்கு பார்வை தெரியாது என்பதால் நான் அந்தோனி இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்தார்கள். நான் அந்தோனி இருக்கும் இடமான கிடாரிப்பட்டிக்கு சென்றேன். அந்தோனி என்னிடம் அவர் பேத்திக்கு உயில் எழுத வேண்டும் என்று சொன்னார். அவர் சொல்ல சொல்ல நான் உயில் எழுதினேன். அதை தட்டச்சு செய்து மீண்டும் வந்து அந்தோனியிடம் படித்து காண்பித்தேன். அவர் அந்த உயில் சரியாக இருப்பதாக சொல்லி கையெப்பம் செய்தார். ஒரு ஏக்கர் நிலத்தை உயில் எழுதி வைத்தார். அதில் சாட்சிகளாக பாண்டி, ஆதிரத்தினம் ஆகியோர்கள் கையெப்பம் இட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ல் தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையெப்பம் என்னுடையது தான்.

**3 ம் பிரதிவாதி தரப்பு** குறுக்கு விசாரணை

உயில் எழுதப்பட்டபோது அந்தோனி சுயநினைவோடு இருந்து புரிந்து கொண்டு கையெப்பம் இட்டார் என்றால் சரிதான். அந்தோனி பாதிரியார் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் இருந்து 1 ஏக்கர் நிலத்தை உயில் எழுத சொன்னார் என்றால் சரிதான். 1 ஏக்கர் தவிர அந்த உயிலில் வேறு இடங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. அந்தோனி பாதிரியாருக்கு கிடாரிபட்டியில் 2 1/2 ஏக்கர் கிரைய பாத்தியம் என்று சொன்னார். அந்த கிரைய சொத்தில் 1 ஏக்கரை தான் அமலிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

1- ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அசல் வழக்கு எண்.3/2017 வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பி.வா.சா.ஆ 1 ஆவணம் எழுதி

சுமார் 25 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். அந்த ஆவணம் எழுதப்பட்டபோது எனது முகவரி தற்போது சம்மன் வந்த முகவரி தான். கிடாரிப்பட்டிக்கு உயில் எழுதவேண்டும் என்று என்னை அழைத்து சென்றாது யார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் கிடாரிப்பட்டிக்கு நான் ஆட்டோவில் சென்றேன். அந்தோனி பாதிரியார் வீடு உள்ள இடத்தை எனக்கு யார் சொன்னது என்றால் என்னை அழைத்து சென்ற நபர் தான் சொன்னார் அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. சுமார் 2 மணி நேரம் நான் அங்கு வைத்து உயில் எழுதினேன். அந்த உயில் ஆவணம் எங்கு சென்று தட்டச்சு செய்துவந்தேன் என்றால் திருமலை நாயக்கர் மகாலில் சென்று தட்டச்சு செய்து வந்தேன். தட்டச்சு செய்தவர் பெயர் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ல் பக்கம் 3 ல் 8 வது வரியில் திருத்தம் உள்ளதை குறிப்பிட்டு எதுவும் அந்த ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக பத்திரம் எழுதும்போது திருத்தல், அடித்தல் இருந்தால் அதை குறித்து எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். அந்த ஆவணம் பதியாத ஆவணம் என்பதால் அதை எழுதவில்லை. பி.வா.சா.ஆ 1 பதியாத ஆவணம் என்பதால் எப்போது வேண்டுமானாலும் அந்த ஆவணத்தை எழுதி அதை எப்போது வேண்டுமானாலும் கையெழுத்து வாங்கி கொள்ளலாம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் தயாரித்தவர் என்ற இடத்தில் எனது விலாசம் உள்ளது. எனது கையெழுத்து, தேதி, மாதம், வருடம் ஆகியவை இல்லை என்றால் சரிதான்.

**2.** அந்தோனி யார் பெயருக்கு உயில் எழுத சொன்னார் என்றால் அவரது பேத்தி அமலி பெயருக்கு எழுத் சொன்னார். அமலியின் கணவர் பெயர் ராஜசேகரன். நான் உயில் எழுத சென்றபோது என்னை அழைத்து வந்த நபர் அந்தோனி கூறிதன் பேரில் தான் என்னை அழைத்து வந்தாரா என்று நான் அந்தோனியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்கவில்லை. பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தில் 1 ஏக்கர் நிலம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் தெற்கு நான்குமாலில் வீடு எதுவும் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் உயில் வாசகத்தில் தென்புறம் வீடு உள்ளதாக அந்தோனி சொல்லி நான் எழுதியுள்ளேனா என்றால் சரிதான். அமலியின் கணவர் ராஜசேகரன் தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை உற்பத்தி செய்து கொடுத்துள்ளேன் என்றாலும் ஆகையால் தான் 25 ஆண்டுகளுக்கு முன்பு அந்தோனியிடம் உயில் எழுதுவதற்காக என்னை யார் அழைத்து சென்றார்கள் என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. எனது ஆதாரில் உள்ள விலாசமும் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள எனது விலாசமும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. ஆதாரில் இருப்பது புதிய கதவு எண். பி.வா.சா.ஆ 1 ல் இருப்பது பழைய கதவு எண். எனது பத்திர எழுத்தர் உரிமத்தை நான் கொண்டுவரவில்லை. அந்தோனி பாதிரியாரை நான் பார்த்ததில்லை

என்றாலும் நான் கூறுவதுபோல் என்னை யாரும் 25 ஆண்டுகளுக்கு முன்பு அந்தோனி பாதிரியாரிடம் அழைத்து செல்லவில்லை என்றாலும் பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை நான் தயார் செய்யவில்லை என்றாலும் 2 ம் பிரதிவாதி கேட்டுகொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 25 ஆண்டுகளுக்கு முன்பு பி.வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதுவதற்கு அந்தோனி பாதிரியாரிடம் என்னை யார் அழைத்து சென்றார்கள் என்று நான் ஞாபகமில்லை என்று கூறுவதால் அந்த ஆவணத்தையும் எழுதியது பற்றி எனக்கு ஞாபகமிருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பி.வா.சா.ஆ 1 எழுதியதாக சொல்லப்படும்போது அதற்கான ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் என்ன என்ன ஆவணங்களை பார்த்தேன் என்றால் கிரைய பத்திரத்தை மட்டும் பார்த்தேன். நான் அந்தோனி பாதிரியார் சொல்லி அமலிக்கு உயில் ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை நான் தயாரித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தை நான் தயார் செய்வதற்காக சென்றதாக சொல்லப்படும்போது அங்கு சாட்சிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். சாட்சிகள் இருவரும் புதுாரை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. சாட்சிகள் பி.வா.சா.ஆ 1 ல் கையெழுத்துயிட்டதாக சொல்லப்படும்போது நான் அதை பார்க்கவில்லையா என்றால் கையெழுத்து போட்டார்கள். ஆனால் அவர்கள் விலாசத்தை நான் பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ 1 என்னால் தயார் செய்யப்பட்டிருந்தால் அதில் உள்ள சாட்சிகளை பற்றிய விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் போலியாக தயார் செய்யப்பட்டதால் தான் அந்த விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் 2 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.